[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 1

(6) தமிழக அரசு உணவுப் பாதுகாப்பை அளிப்பதுடன், உணவுப் பொருள்கள் தரமானதாக, உண்பதற்குத் தகுதியானதாக உள்ளனவா என்பதை உறுதி செய்யவும், உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும் கலப்படப் பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறியவும், தேவையான பயிற்சிகளை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்க ஏதுவாக, ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்க, காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்திலுள்ள 3.03 ஏக்கர் நிலம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில், Centre for Consumer Education Research, Teaching, Training and Testing *நிறுவனம் ஓர் ஆய்வகத்தைக் கட்டுவதற்காகவும், பயிற்சி அளிப்பதற்காகவும் 10 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில், (மேசையைத் தட்டும் ஒலி) 14,750 சதுர அடி நிலப்பரப்பில் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின் ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு தமிழக அரசின் பங்கீடாக 40 சதவீதத் தொகையான 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.*

முற்பகல் 11–55

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் குறைந்த விலையில் நிறைவான மற்றும் தரமான சேவையினைப் பொது மக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் பெற வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் பிறகு பேசலாம். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பார்க்கலாம்,*

உட்காருங்கள். (குறுக்கீடு) பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) தினமும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள். 2014–2015 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். (குறுக்கீடு) நான் அஜெண்டாவிலுள்ள அடுத்த அலுவலுக்குச் சென்றுவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்.

(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிப்பேட்டையில் அமையவிருக்கின்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். பிறகு பார்க்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்பு வரும்பொழுது பேசலாம். (குறுக்கீடு) அடுத்த வேலை நாளில் கண்டிப்பாக இதையெல்லாம் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014–2015ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,